ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2023.10.16 |

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2023 செத்தெம்பர்

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2023 செத்தெம்பரில் தயாரித்தல் நடவடிக்கைகளில் சுருக்கத்தையும் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலையும் எடுத்துக்காட்டின.**

**தயாரிப்புக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 செத்தெம்பரில் 45.7 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரித்தல் நடவடிக்கைகளில் சுருக்கத்தினை எடுத்துக்காட்டியது.** இப்பின்னடைவிற்கு அனைத்து துணைச் சுட்டெண்களிலும் அவதானிக்கப்பட்ட குறைவடைந்த செயலாற்றம் துணையளித்தது.


புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் வீழ்ச்சியானது உணவு மற்றும் குடிபானங்கள், புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறைகளின் தயாரிப்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. மந்தமான நுகர்வோர் கேள்வி, போட்டி விலைகளில் சந்தையில் இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்கள் அதிகரித்தளவில் கிடைக்கப்பெறும்தன்மை என்பன காரணமாக சவால்மிக்க வியாபார நிலைமைகளை பல தயாரிப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். மேலும், தற்போது இடம்பெறுகின்ற மந்தமான உலகளாவிய கேள்வியின் காரணமாக புடவை மற்றும் அணியும் ஆடைகள் தயாரிப்புத் துறை தொடர்ந்தும் சுருக்கமடைந்தது. மேலும், தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பனவும் புதிய கட்டளைகளிலும் உற்பத்தியிலும் வீழ்ச்சிக்கு அமைவாக குறைவடைந்தன. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் செத்தெம்பர் காலப்பகுதியில் குறுக்கமடைந்தது.

| மாறி | ஓகத் | செத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **49.3** | **45.7** | **-** | **வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 53.0 | 43.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 48.0 | 44.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 43.5 | 47.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 50.0 | 47.0 | - | நடுநிலை மட்டத்திலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.0 | 49.0 | - | நீட்சியிலிருந்து குறுக்கமடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

எனினும், வரவிருக்கும் பண்டிகைப் பருவகாலத்தில் கேள்வியில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பின் பிரதான காரணமாக அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கை சாதகமாகக் காணப்பட்டது.

**தயாரிப்பு கொ.மு.சு 45.7**
**2023 செத்தெம்பர்**



மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் பெறுமதி ஓகத்திலிருந்து 0.1 புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2023 செத்தெம்பரில் 49.1 கொண்ட பெறுமதியினைப் பதிவுசெய்தது.

சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு. 2023 செத்தெம்பரில் உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இது அதிகரித்தது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் தயாரிப்பு முகாமையாளர் சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 ஒத்தோபர் 13 அன்று உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 செத்தெம்பரில் 54.7 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்தில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் இதற்கு முன்னிலை வகித்திருந்தன. எவ்வாறிருப்பினும், நிலுவையிலுள்ள பணிகள் மாதகாலப்பகுதியில் சுருக்கமடைந்து காணப்பட்டன.


**பணிகள்**
**கொ.மு.சு 54.7**
**2023 செத்தெம்பர்**

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், உண்மைச் சொத்து, காப்புறுதி மற்றும் கல்வி ஆகிய துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2023 ஓகத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்திலேனும் 2023 செத்தெம்பரில் அதிகரித்தன.

2023 செத்தெம்பரில் தொழில் நடவடிக்கைகளும் விரிவடைந்து பல்வேறு துணைத் துறைகளில் சாதகமான அபிவிருத்திகளைக் காண்பித்தன. அதற்கமைய, வீழ்ச்சியடைகின்ற கடன்வழங்கல் வீதங்களுக்கிசைவாக கொடுகடன் கேள்வியில் படிப்படியான அதிகரிப்பு காரணமாக நிதியியல் பணிகள் துணைத் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் மேலும் மேம்பட்டன. மேலும், மாதகாலப்பகுதியில் கல்வி மற்றும் போக்குவரத்து துணைத் துறைகளில் சில சாதகமான அபிவிருத்திகள் காணக்கிடைத்தன. அதேவேளை, மாதகாலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட சுற்றுலாப் பயணி வருகைகளில் சிறிதளவு வீழ்ச்சியினைத் தொடர்ந்து, தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறையும் மெதுவான வேகத்திலேனும் தொடர்ந்தும் அதிகரித்தது.

பல கம்பனிகளில் இடம்பெற்ற ஆட்சேர்ப்புக்கள் காரணமாக முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் தொழில்நிலை அதிகரித்த அதேவேளை நிலுவையிலுள்ள பணிகள் உயர்வான வேகத்தில் குறைவடைந்தன.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | ஓகத் | செத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.6** | **54.7** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | கொ.மு.சு துணைச் சுட்டெண்கள் | | | |
| புதிய வியாபாரங்கள் | 62.4 | 55.8 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 58.9 | 53.4 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 50.0 | 51.0 | + | நடுநிலையிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 47.3 | 41.1 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 69.4 | 72.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளுக்கு மத்தியில் எதிர்பார்க்கப்பட்ட பருவகால கேள்வி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் மேம்பாடுகள் என்பன மூலம் முன்னிலை வகித்து செத்தெம்பரில் தொடர்ந்தும் அதிகரித்தது.

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 செத்தெம்பரில் 50.8 ஐப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்தியது.

சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை ஐக்கிய இராச்சியத்தின் பணிகள் கொ.மு.சு அந்நாட்டின் பணிகள் நடவடிக்கைகளில் சீர்குலைவினை எடுத்துக்காட்டியது..

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2023 ஒத்தோபர் 13 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.